# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 2



பதிப்பாசிரியர்
முனைவர் ஆ. சரவணன்

# தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு

**(தேசியக் கருத்தரங்கம்)**

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVIII + 430 = 458
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 88 - 2**

# Tribes of Tamil Nadu ; History Society and Culture

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVIII + 430 = 458
Prize : **Rs. 400/-**


SUDA

Tel : (

433
442
451
457
461
465
469
475
480
487
494
497
505

74. மன்னான் பழங்குடி மக்களின் பொருள்சார் பண்பாட்டு வடிவங்கள் 509
**முனைவர் கா. காமராஜ்**

75. An anthropological study on Familial role and Duties of Mannan Tribes of Kerala 513
**Soumya Devasia**

76. மலையன் பழங்குடி மக்களின் நம்பிக்கைகள் 520
**மு. சதீஸ்குமார்**

77. Malayalan Tribes - Dr. K.S. Midhun 527

78. முதுவர் பழங்குடி மக்களின் பண்பாட்டுக் கூறுகள் 532
**முனைவர் தி. உமாபதி சிவகுமார்**

79. முதுவர் மலைவாழ் மக்களின் தொழில்களும் சடங்குகளும் 540
**கே. சி. ஆர். ஷிஜி**

80. முதுவான் பெண்களின் சடங்குகளும் நம்பிக்கைகளும் 545
**முனைவர் மு. ருக்மணி**

81. தச்சநாடமூப்பன் பழங்குடியினர் வாழ்வும் வரலாறும் ஓர் ஆய்வு 551
**முனைவர் பா. சந்திரமோகன்**

82. Tribes who Make Up the Blue Mountain in India 559
**Dr. K. Malar Mathi**

83. Breast Feeding Practices among Tribal Women: A Sociological Study566
**K. Vijayakumar & Dr. R. Rajendran**

84. பழங்குடி மக்களின் வழக்காற்றியல் பொதுநோக்கு 576
**முனைவர் சு. வேலாயுதன்**

85. தமிழகப் பழங்குடி மக்களின் பண்பாட்டு வாழ்க்கை ஓர் ஆய்வு 581
**முனைவர் க. பழனிச்சாமி**

86. பழங்குடி மக்களின் பண்பாட்டு அசைவியக்கம் 587
**முனைவர் ஜா. கென்ஸ் தயாளன்**

87. பழங்குடி மக்களின் பண்பாடுகள் 591
**ரா. பிரசன்னாதேவி**

# 80. முதுவான் பெண்களின் சடங்குகளும் நம்பிக்கைகளும்

**முனைவர் மு. ருக்மணி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்-29.

முதுவான் என்னும் பழங்குடி மக்கள் கேரள மாநில இடுக்கி மாவட்டத்தில் அடிமாலி, மூணார் என்னும் இடங்களிலுள்ள மலையோரக் காடுகளில் மக்கள் எளிதில் சென்று அடைய இயலாத பகுதிகளில் குடிகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய முன்னோர்கள் மதுரையில் இருந்து இங்கு வந்து குடியேறியதாக முதுவான் மக்கள் நம்புகின்றனர். இதனை உண்மையறியும் பொருட்டு இம்மக்களின் வாய்மொழி இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. இம்மக்கள் இன்னும் தங்களுக்கென்று தனித்த ஒரு கலாச்சாரத்தோடும் பண்பாட்டோடும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாகப் பெண்களின் பிறப்பு, பெயரிடல், மூக்கு குத்துதல், காதுகுத்து, பூப்பெய்தல், கொண்டைகட்டுதல் போன்ற சடங்குகளையும் குழந்தைப்பேறு சம்பந்தமான நம்பிக்கைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலே கூறிய சடங்குகள், விழாக்களைப் போலவே மேற்கொள்ளப்படுகின்றன. மரணச் சடங்கு கூட ஒரு விழாவினைப் போன்றே நிகழ்த்தப் படுகின்றது. இத்தகைய சடங்குகளை அர்னால்டு வான் ஜெனப் மானிட இயலார் இவ்வாழ்வியல் தொடர் 'வாழ்க்கைச் சுழற்சி சடங்குகள்' என அறியப்படுகின்றன. இவை இனத்திற்கு இனம் மாறக்கூடியவை. குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே இவ்வகைச் சடங்குகள் பெரிதும் கடைப்பிடிக்கப்படுகின்றன என்ற கூற்றிற்கு ஏற்ப முதுவான் மக்களிடம் பல சடங்குகள் உள்ளன.

## சடங்கு பெயர்க்காரணம்

சடங்கு என்ற சொல் பண்டையத் தமிழிலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் பரிபாடலில் 'வெறியாட்டினை' விழாவாகக் காட்டியிருப்பதிலிருந்து சடங்கினை 'விழா' என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகிறது. சடங்குகளே விழாக்களுக்கு அடிப்படையானவை. சடங்குகளின் கூட்டுத் தொகுதியினை விழா எனலாம். சமூக நம்பிக்கையின் அடிப்படையை காட்டுவன சடங்குகளாகும் என நச்சினார்க்கினியர் பரிபாடலுக்கு உரைகூறும் போது சடங்கு குறித்துக் குறிப்பிட்டுள்ளார். சடங்குகளின் தன்மைகள் பன்முகப்பட்டவை. அவை நிகழ்த்தப்படும் இடத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒவ்வொரு சமூகத்தின் சடங்குகளும் தனித்தன்மைகள் வாய்ந்தவை. சடங்குகளை ஒப்பிட்டு ஆராயும்போது பொதுத்தன்மைகள்